| | | |
|---|---|---|
| சாட்சி : PW3<br>திரு.பன்னீர்செல்வம்<br>த.பெ. திரு.நல்லுசாமி | அ.வ.எண். 316/2020 | 14.08.2025 |

<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி வேணுகோபால் சொல்லி இவ்வழக்கில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் வாதி வேணுகோபால் தகவல் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல, நான் சொல்லி வழக்கறிஞர் தயார் செய்தார்.

2) முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பத்தியில் ஆதியிலேயே எனது தாத்தா காலத்திலேயே அவர் அவருக்கு தனித்தனியாக பாகம் பிரிந்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். அப்படியானால், எனது தாத்தா காலத்திலேயே தனித்தனியாக பாகம் பிரித்துக்கொண்டனரா என்றால் நல்லுசாமி, பாலசுப்ரமணியனும் மற்றும் சுப்ரமணியன் ஆகியோர் பிரித்துக்கொண்டனர்.

3) எந்த வருடம் பிரித்து கொண்டனர் என்றால் வருடம் தெரியாது. யார் யாருக்கு எவ்வளவு விஸ்தீரணம் பிரிக்கப்பட்டது என்றால் நல்லுசாமிக்கு தெற்கு ஓரத்திலும், அதை ஒட்டி பாதை விட்டுவிட்டு கிழக்கே பாலசுப்ரமணியனுக்கு, மேற்கில் சுப்ரமணியனுக்கும் ஒதுக்கப்பட்டது, ஆனால் அதன் விஸ்தீரணம், சர்வே எண் தெரியாது .

4) மேற்படி 3 நபர்கள் பாகம் பிரித்ததற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை, வாய்மொழியாக பிரித்துக்கொண்டனர். நான் மேற்சொன்ன பாதை எந்த ஆவணத்தில் உள்ளது என்றால் ஆவணத்தில் இல்லை.

எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 6 வது பத்தியில் மேற்படி பொதுபாதைக்கு வடபுறமாக சுப்ரமணியனின் பாகத்தை எனது தகப்பனார் நல்லுசாமி காலிமனையாக 20 வருடங்களுக்கு முன்பே விலைக்கு வாங்கிவிட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. அப்படியானால் அவ்வாறு எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான், தவறாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

5) எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 7 வது பத்தியில் பாலசுப்ரமணியன் காலத்தில் அவரது பாகத்தில் எந்த ஆண்டு வீடு கட்ட அஸ்திவாரம் போட்டார் என்றால் வருடம் தெரியாது. 3 ம் பிரதிவாதி லெட்சுமணன் எப்போது அஸ்திவாரத்தின் மீது வீடு கட்டி, செப்டிக் டேங்க் அமைத்தார் என்றால் வீடு கட்டி 10 வருடம் இருக்கும், செப்டிக் டேங் கட்டி 3–4 வருடம் இருக்கும்.

6) எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 9 வது பத்தியில் போலிசார் விசாரணை நடத்தியதாக கூறியுள்ளேன், என்ன விசாரணை செய்தனர் என்றால் அதுபற்றி எனக்கு நேரடியாக தெரியாது. எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 10 வது பத்தியில் லெட்சுமணன் சாட்சி அளித்த போது, நல்லுசாமி, பாலசுப்ரமணியன், சுப்ரமணியன் ஆகியோர் பாகமே பிரிக்கவில்லை என்று நீதிமன்றத்தில் கூறியதாக வேணுகோபால் என்னிடம் கூறினார் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை, நான் அவ்வாறு சொல்லவில்லை.

7) எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 11 வது பத்தியில் லெட்சுமணன் பாகம் பிரிக்கவில்லை என்று கூறியுள்ளது பொய்

என்றும், பல தலைமுறைகளுக்கு முன் பாகம் பிரிந்து, பாலசுப்ரமணியன் தனது இடத்தில் அஸ்திவாரம் போட்டதாகவும், எனது தகப்பனாரும் அவரது பாகத்தில் வீடு கட்டியதாகவும் கூறியுள்ளேன், எப்பொழுது பாகம் பிரிக்கப்பட்டது என்றால் வருடம் தெரியாது. அப்படியானால் மேற்படி பாகம் பிரித்தது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

8) எனது சகோதரர் பெயர் என்ன என்றால் ராமலிங்கம். எனது சகோதரர் ராமலிங்கத்தை விசாரித்தால் மேற்படி விபரம் தெரியவரும் என்றால் சரிதான். எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் 12 வது பத்தியில், மேற்படி பொதுபாதைக்கு வடக்கே உள்ள சொத்தை அதன் உரிமையாளர் சுப்ரமணியன் விற்றதும், வேணுகோபாலன் வாங்கியதும் நன்றாக தெரியும் என்று கூறியுள்ளேன், எப்போது விற்றார் என்றால் ஆண்டு தெரியாது, வேணுகோபாலன் வாங்கி விட்டு என்னை வாங்க சொல்லியதால் மேற்படி கிரைய விபரம் தெரியும்.

9) எவ்வளவு விஸ்தீரணங்களுக்கு வேணுகோபாலன் கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. என்ன புல எண் என்றால் தெரியாது. சுப்ரமணியன் பெயரில் சொத்து இருந்ததற்கு ஆவணம் பார்த்துள்ளேனா என்றால் பார்த்ததில்லை. கிரையம் கொடுத்த தேதியில் மேற்படி சுப்ரமணியன் மட்டுமே அதன் உரிமையாளர் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

10) மேற்படி சுப்ரமணியன் உடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் அவரது தம்பி ராஜலிங்கத்தை மட்டுமே தெரியும், மற்றவர்களை தெரியாது. சுப்ரமணியனின் வாரிசுகள் யார் என்றால் வெங்கடேசன் என்ற மகனும், சுகந்தி என்ற மகளும் உள்ளனர். மேற்படி வெங்கடேசன்

தற்போது உள்ளாரா என்றால் இல்லை, இறந்துவிட்டார். வெங்கடேசனின் வாரிசுகள் யார் என்றால் மனைவி தனலெட்சுமி, ஒரு மகளும், ஒரு மகனும் உள்ளனர்.

11) தாவா சொத்து சுப்ரமணியனுக்கு தனிப்பட்ட முறையில் பாகம் பிரிக்கப்படவில்லை என்றாலும், விற்பனை செய்த காலத்திலேயே மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றாலும் வாதிக்கு ஆதரவாக நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.